பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

20 03 2025 6 30

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நக்சலைட்டுகளை ஒடுக்குவதற்கான நடவடிக்கைகளில் பாதுகாப்புப் படையினர் பெறும் வெற்றியைப் பெற்றிருப்பதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

2. பாதுகாப்பு தளவாடங்களை கொள்முதல் செய்வதற்கான 54 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு அதற்கான குழுமம் ஒப்புதல் அளித்துள்ளது.

3. டாஸ்மாக் மதுக்கடைகளை படிப்படியாக குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் கோடை வெயிலின் தாக்கம் அடுத்த சில தினங்களுக்கு 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டியில் குத்துச்சண்டை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள்---*

<<<<>>>>

நக்சலைட்டுகளை ஒடுக்குவதற்கான நடவடிக்கைகளில் பாதுகாப்புப் படையினர் பெறும் வெற்றியைப் பெற்றிருப்பதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.
சமூக வலைதளத்தில் இக்கருத்தைப் பதிவு செய்துள்ள அவர், அடுத்த ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் நக்சலைட்கள் முற்றிலுமாக ஒடுக்கப்படுவார்கள் என்று தெரிவித்துள்ளார்.
சத்தீஸ்கரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 30 நக்சலைட்கள் சுட்டுக்கொல்லப்பட்டதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
நக்சலைட்டுகள் சரணடைவதற்கான வாய்ப்புகள் வழங்கப்படும் போதிலும், அதனைப் பயன்படுத்தாமல் வன்முறையில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு. அமித் ஷா எச்சரித்துள்ளார்.

<<<<>>>>

பாதுகாப்பு தளவாடங்களை கொள்முதல் செய்வதற்கான 54 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு அதற்கான குழுமம் ஒப்புதல் அளித்துள்ளது.
புதுதில்லியில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற இந்த குழுமத்தின் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.
பாதுகாப்புப் படைகளின் திறனை வலுப்படுத்தும் நோக்கில் நவீன பாதுகாப்பு தளவாடங்களை கொள்முதல் செய்வதற்கான திட்டங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

<<<<>>>>

திமுக உள்ளிட்ட சில எதிர்க்கட்சி உறுப்பினர்களின் அமளி காரணமாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் நாள்முழுவதும் ஒத்திவைக்கப்பட்டன.
மக்களவை இன்று கூடியதும் திமுக உறுப்பினர்கள் தொகுதி மறுசீரமைப்பு பிரச்சினையை எழுப்பி முழக்கங்களை எழுப்பினர்.
இதன் காரணமாக அவை நடவடிக்கைகள் முதலில் நண்பகல் 12 மணி வரையிலும், பின்னர் பிற்பகல் 2 மணி வரையும் ஒத்திவைக்கப்பட்டன.
அவை மீண்டும் கூடியபோது இதே நிலை நீடித்ததால் அவை நடவடிக்கைகளை நாள் முழுவதும் ஒத்திவைப்பதாக பேரவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா அறிவித்தார்.
திமுக உறுப்பினர்கள் தொகுதி மறுசீரமைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து **T-Shirt** அணிந்து வந்தது ஏற்புடையதல்ல என்றும் அவர் கூறினார்.
விதிகளின்படிதான் அவை நடத்தப்படும் என்றும் திரு. ஓம் பிர்லா தெரிவித்தார்.
அவையின் கண்ணியத்தை குறைக்கும் வகையில் உறுப்பினர்கள் செயல்பட வேண்டாம் என்றும் மக்களவைத் தலைவர் அறிவுறுத்தினார்.
மாநிலங்களவை நடவடிக்கைகளும் இதே பிரச்சினை காரணமாக நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டன.

<<<<>>>>

இதனிடையே மக்கள் தொகை கணக்கெடுப்புக்குப் பின்னரே தொகுதி மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களவைத் தொகுதி மறுசீரமைப்புப் பணிகளின்போது தென் மாநிலங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாததை மத்திய அரசு உறுதி செய்யும் என்றார்.

தமிழகத்தில் தங்கள் அரசின் தோல்வியை மறைக்கவே திமுக உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் இப்பிரச்சினையை எழுப்புவதாகவும் திரு. பிரல்ஹாத் ஜோஷி குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

விவசாயிகளின் நலன்களைப் பாதுகாப்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக வேளாண்துறை இணையமைச்சர் திரு. **Bhagirath Choudhary** கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வேளாண் விளைபொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசு தொடர்ந்து உயர்த்தி வருவதை சுட்டிக்காட்டினார்.

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி இருப்பதாகவும் திரு. **Bhagirath Choudhary** கூறியுள்ளார்.

<<<<>>>>

டாஸ்மாக் மதுக்கடைகளை படிப்படியாக குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மதுவிலக்குத்துறை அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி கூறியுள்ளார்.

இன்று பேரவையில் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது குறுக்கிட்டுப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்

மாநிலத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் 603 மதுக்கடைகள் மூடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

டாஸ்மாக் விவகாரத்தில் முந்தைய அஇஅதிமுக அரசு கடைபிடித்த அணுகுமுறையையே திமுக அரசும் பின்பற்றுவதாக திரு. செந்தில் பாலாஜி கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு குற்றம் சாட்டியுள்ளார்.

திண்டிவனத்தை அடுத்த தைலாபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் கொலை சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக குறை கூறினார்.

சட்டம்-ஒழுங்கை சீராக பராமரிக்க உறுதியான நடவடிக்கைகளை திமுக அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. ராமதாசு வலியுறுத்தினார்.

<<<<>>>>

கோடை வெயிலின் தாக்கத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்காக நாடு முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

ஆயுஷ் துறை இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கோடை வெயிலினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், அதனைத் தடுப்பதற்கான விழிப்பு நடவடிக்கைகள் குறித்தும் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் கோடை வெயிலின் தாக்கம் அடுத்த இரு தினங்களுக்கு 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் அளவுக்கு அதிகரிக்கக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக கரூர் பரமத்தியில் 37 புள்ளி 5 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவானது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மதுரையில் கோடை வெயிலின் தாக்கத்தைக் கருத்தில் கொண்டு போக்குவரத்து சிக்னல்களில் நிழற் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இருசக்கர வாகனங்களில் வருவோருக்கு இது பெரிதும் உதவிகரமாக உள்ளது என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

<<<<>>>>

தேர்தல் பணிகளை சிறப்பாக மேற்கொள்வதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

தலைமைத் தேர்தல் ஆணையராக திரு. **Gyanash Kumar** பொறுப்பேற்ற பின்னர் இதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நாடு முழுவதும் அனைத்து அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் பங்கேற்கும் 5 ஆயிரம் கூட்டங்களை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இம்மாத இறுதிக்குள் இதற்கான நடவடிக்கைகளை முடிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான பணிகளும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் பணியில் ஈடுபடுபவர்களுக்கு டிஜிட்டல் பயிற்சி வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

நாமக்கல் மாவட்டத்தில் பழங்குடியின விவசாயிகளுக்கான ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி முகாம் இன்று கார்கூடல்பட்டியில் நடைபெற்றது.

-------------

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையில் இருந்து பொருட்களை அகற்றும் பணிகள் இன்று தொடங்கின.

-------------

வேலூர் சரக டி.ஐ.ஜி. அலுவலகத்தில் கூடுதல் காவல்துறை இயக்குநர் திரு. டேவிட்சன் ஆசிர்வாதம் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

-------------

மயிலாடுதுறை மாவட்டத்தில் தொடர்ந்து 3 மணி நேரம் சிலம்பம் சுற்றி உலக சாதனை படைத்த மாணவர்களுக்கான பாராட்டு விழா இன்று நடைபெற்றது.

-------------

கிருஷ்ணகிரி மாவட்டம் பாம்பாறு அணையில் இருந்து பாசனத்திற்காக இன்று முதல் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

-------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் சிட்டுக்குருவிகள் தினத்தையொட்டி தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் சார்பில் சிட்டுக் குருவிகளுக்கான செயற்கை கூடுகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

-------------

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டியில் குத்துச்சண்டை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ஒலிம்பிக் குழுவின் கூட்டத்தில் ஒருமனதாக இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் போட்டி 2028ஆம் ஆண்டு நடைபெற உள்ளது.

--------------

கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டிகள் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று புதுதில்லியில் தொடங்கின.

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா இதனைத் தொடங்கிவைத்தார்.

6 பிரிவுகளில் நடைபெறும் போட்டிகளில் ஆயிரத்து 300க்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர்.

--------------

சென்னை சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Akanksha Salunkhe** மற்றும் **Anahat Singh** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் **Veer Chotrani** இலங்கையின் **Ravindu Laksiri**-ஐ வென்று இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

---------------

ஆசியக் கோப்பை கடற்கரை கால்பந்துப் போட்டி தாய்லாந்தில் இன்று தொடங்குகிறது.

முதல் போட்டியில் இந்தியா – தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

**Pattaya**-வில் இப்போட்டி இன்னும் சற்று நேரத்தில் தொடங்க உள்ளது.

--------------

சிங்கப்பூரில் நடைபெற்ற இளையோர் படகுப் போட்டியில் இந்தியா ஒரு தங்கம் உட்பட 4 பதக்கங்களை வென்றது.

-------------

உலகக் கோப்பை **Sepaktakraw** போட்டி பட்னாவில் இன்று தொடங்குகிறது.

<<<< >>>>